புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==========================================================================

# எடுத்துரைப்பியல் வகை திறனாய்வும் அதன் பல்வேறு வளர்ச்சி நிலைகளும்

==========================================================================

**நா.மகாலெட்சுமி**

முனைவர் பட்ட ஆய்வாளர்

சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

ஆய்வு நெறியாளர்

முனைவர் இரா. ஜெயஸ்ரீ

தமிழ்உதவிப் பேராசிரியர்

கல்வியல் துறை

சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

**முன்னுரை**

திறனாய்வு என்பது ஒரு இலக்கியத்தை விளக்கிக்கூற, தெளிவாக, சிந்திக்க செய்ய, படைப்பாளனின் படைப்புத்திறனை அறிய, பின்புலத்தை ஆராய்ந்து பயன்பாடு இனம் காண விளைவுகளை அறிவுறுத்த வழிவகை செய்கிறது. இலக்கியத்தின் மொழிநடை, அமைப்பு, நெறிமுறைகள் முதலியவற்றையும் விளக்கி அதன் தரத்தையும் பயனையும் ஆராய்ந்து மதிப்பிடுகிறது.

**திறனாய்வும் இலக்கியமும்**

இலக்கியம் என்பது ஒரு கலை வடிவம். படைப்பு அல்லது ஆக்கம் என்ற பண்பை உடையது. திறானாய்வு அத்தகைய கலை வடிவத்தின் மீதான ஒரு அறிவியல் விசாரணை ஆகும். இலக்கியம், ஆக்கப்படுகிறபோதே திறனாய்வும் தோன்றி விடுகிறது. படைப்பாளி நினைக்கின்ற போதே திறனாய்வுக்குரிய மனப்பான்மையும் தோன்றி விடுகிறது. எனவே இலக்கியமும் திறனாய்வும் ஒன்றையொன்று சார்ந்தும் இணைந்தும் இருக்கின்றன.

**திறனாய்வுத் துறையின் வளர்ச்சி**

இலக்கியத் திறனாய்வு பண்டைய காலத்தில் நக்கீரரும் நப்பசலையாரும் , பெருங்குன்றூர் கிழாரும் அவருடன் தொடர்புடைய கபிலரைப் பற்றி கருத்து கூறியுள்ளார்.

**செருத்த செய்யுட்செய் செந்நாவலின்**

**வேறுத்த கேள்வி விளங்க புகழ்க் கபிலன்**

**இன்றுளனாயின் நன்று 1 (புறம்: 53)**

**என்னும்** பாடலில் இளங்கீரனிடம் கூறுகிறான். இலக்கிய பற்றிய மதிப்பீடு வளர்ச்சியும் தோன்றிவிட்டன. தமிழ்

இலக்கண நூலான தொல்காப்பியம் மேற்குறித்து கருத்து

**" பாடலுட் பயின்வரை நாடுங்காலை 2 ( அகத்திணையியல் 3)**

என்னும் நூற்பாஎழுதிய இளம்பூரணர் செய்யுள் பயின்ற பொருளை ஆராயும் காலம் என குறிப்பிடுகிறார். திறனாய்வின் முக்கிய பண்பு சுட்டுக்காட்டுகிறார். தி.சு. நடராஜன்( திறனாய்வுக்கலை) இலக்கியத்தை கற்கிற திறனாய்வியல் தனித்துறையாக இயக்கம் கொள்ள வேண்டும். என்கிறார் நார்த்தரோப் ஃபிரை என்னும் புகழ்பெற்ற திறனாய்வாளரின் ( Anamomy of critisum ) என்னும் நூலில் இலக்கியக் கோட்பாடு நூலாகவே விளங்குகிறது.

**திறனாய்வாளரும் படைப்பாளரும்**

படைப்பாளி தான் படைக்கும் போது தன் படைப்பு சிறப்பாக சிந்திக்கின்ற சிந்தனைகளின் வெளிப்பாடுகள் தான் என்கிறார் டி.எஸ்.இலியட். திறானாய்வாளன் என்பவன் தேடுவது மற்றும் இல்லாமல் ஒரு செய்தியை தெளிவாக கூற வேண்டும் என்னும் கருத்தை சங்கபாடல் மூலம் அறியலாம்.

**கொங்குதேர் வாழ்கை அஞ்சிறைத் தும்பி**

**காமம் செப்பாது கண்டது மொழிமோ3(குறுந்தொகை )**

**இதன்** பொருள் தேனை நாடிப் போவது, நல்ல தேனை விரும்பித் தேர்வது தேனீயின் வாழ்க்கை ஆகும். அதனை போல திறானாய்வாளன் சரியான செய்திகளை கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.**எப்பொருள்** யார் வாய்க் கேட்பினும் அப் பொருளில் மெய்ப்பொருளில் கண்டு குணம் நாடிக்குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்ள வேண்டும். என திருவள்ளுவர் கூறும் பண்பே திறனாய்வாளர் மேற்கொள்ள வேண்டும். திறனாய்வாளன் படிப்பாளரின் உள்ளத்தில் இடம்பெறும் வகையில் பணியாற்ற திறனாய்வு பண்பாகும்

**திறனாய்வு வகைகள்**

1.விளக்கமுறை திறனாய்வு 2. ஒப்பிட்டுத் திறனாய்வு 3. மதிப்பீட்டு திறனாய்வு 4. ரசனைமுறை அல்லது அழகியல் திறனாய்வு 5. பாராட்டுமுறைத் திறனாய்வு 6. முடிவுமுறை திறனாய்வு 7. விதிமுறைத் திறானாய்வு 8. செலுத்துநிலை படைப்பு வழித் திறானாய்வு 9. பகுப்புமுறை திறானாய்வு

**1.விளக்கமுறைத் திறனாய்வு**

ஒரு பொருளின் பல்வேறு பண்புகளை வெவ்வேறு சொல் வடிவங்களில் அல்லது மொழி அமைப்பில் வெளிப்படுத்துவது விளக்கவியல்

**செருக்குஞ் சினமும் சிறுமையு மில்லர்**

**பெருக்கம் பெருமித நீர்த்து 4**

**(திருக்குறள் குற்றம் கடிதல்: 1)**

குற்றங்களை தவிர்த்து பரிமேலழகர் கூறுகிறார். தொல்காப்பிய மரபியல் **ஒன்றவுரைப்ப துரையெனப் படுமே5**

இது இலக்கணத்திற்கு மட்டுமில்லாது இலக்கியத்திற்கு பொருந்தக் கூடியதாக அமைகிறது.

**2.ஒப்பிட்டுத் திறனாய்வு முறை**

இரு பொருள்களுக்கு இடையே ஒற்றுமை, வேற்றுமைகளை இனம் காண்பது போல கலை இலக்கியங்களுக்கு ஒன்றுபட்டது. மற்றும் வேறுபட்ட பண்புகளைப் பார்ப்பது திறானாய்வாளன் இயல்பாகும். நாடகவழக்கு, உலகவழக்கு, செவ்வியல் வழக்கு ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து தான் நூற்பாக்களை தொல்காப்பியர் எழுதியுள்ளார்.

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**மறையோர் தேஏத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ் துணைமையோர் இயல்பே 6 (தொ.கள-1)**

வடமொழி மரபோடு ஓப்பிடுகிறார்.

**3.மதிப்பிட்டுமுறைத் திறனாய்வு**

சிறந்த இலக்கியம் எதுவென தேர்வதற்கு மதிப்பிட்டு முறைப் பணி பயன்படுகிறது.

**எடுமெடுமென வெடுத்த தோர்**

**இகலொலி கடலொலியக்கவே**

**விடுவிடுவிடு பரிக்குழாம்**

**விடுவிடு மெனுமொழி மிகைக்கவே** 7

**( கலிங்கத்துப்பரணி 404 )**

ஒரு போர்க்கள வருணனையைக் காட்டுவதற்கு பொருத்தமாக சித்திரமாக அமையும் ஓசை நயக் கவிதை மதிப்புடையதாக விடுகிறது.

**4. இரசனைமுறை (அ) அழகியல் வாதத் திறனாய்வு**

திறனாய்வில் நீண்ட காலமாக இருந்து வரும் விவாதம் உருவம் உள்ளடக்கம் பற்றியதாகும். ' உருவமே முதன்மையானது அதுவே இலக்கியத்திற்கு கலையழகைத் தருவது இரசனைமுறை திறனாய்வு ஆகும்.

**எடுத்துரைப்பியல் திறனாய்வாளர்கள்**

எடுத்துரைப்பியல் என்பது ஒரு இலக்கியத்தில் உள்ள செய்திகளை எடுத்து`கூறுவது ஆகும். எடுத்துரைப்பியல் என்பது இலக்கியத்தின் அறிவுத்துறையாக விளங்கி வருகின்றது.எடுத்துரைப்பியல் கொள்கை, தன் உணர்ச்சி நாடகம், காப்பியத்தின் வேறுபாடுகளை எடுத்துக் கூறுகிறது.

**எடுத்துரைப்பியல் தோற்றம்**

ஐரோப்பாவில்எடுத்துரைப்பு நீண்ட செழுமையான வரலாறு கொண்டதாக உள்ளது ஆனால் கி.பி.5 ம் நூற்றாண்டில் அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்க சிந்தனையாளர்களால் எழுப்பப்பட்டது. பின் 18ம் டெகா மெரான் என்ற புத்தகத்தின் வாயிலாக ட்வெட்டான் டோராவ் `என்பவரால் உருவாக்கப்பட்டது. ஜெரார்ட் ஜெனெட்` மற்றும் ஏ.ஜெ. ஆகியோர் இந்த எடுத்துரைப்பியல் ஜான்பாப்டிஸ்ட் பிரெக்ஸ் மேலும் வளர்க்கப்பட்டது.

**மேலைநாடுகளின் எடுத்துரைப்பியல்**

16ம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் மறுமலர்ச்சி இது இலக்கியம் மற்றும் கலைகளில் ஒரு புதிய ஆர்வத்தை உருவாக்கியது. ரஷ்ய அறிஞரான விளாதிமிர் ஃப்ராப் ` என்பாரின் முயற்சியால் எடுத்துரைப்பியல் புதிய கோட்பாடு சிந்தனைத் தளத்திற்கு அடிப்படையாக உள்ளது. 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு அறிஞர் ஜான்பாட்டிஸ்ட் பிரெக்ஸ் இலக்கிய திறனாய்வு அடிப்படை கோட்பாட்டை உருவாக்கினார். 19ஆம் நூற்றாண்டில் ஆஸ்திரியன் அறிஞர் காரல்பரீட்ரீச் ஷொக் இலக்கிய திறனாய்வை தத்துவம் பார்வையில் அணுகி உள்ளார். 20ம் நூற்றாண்டில் திறானாய்வுப் பார்வைகள் வளர்ச்சி அப்பொழுது மார்க்சிய திறனாய்வு, பெண்ணியத் திறனாய்வு மற்றும் புதிய திறனாய்வுகள் போன்றவை வளர்ந்து வந்தன

**எடுத்துரைப்பின் அடிப்படை அலகு**

1. நிகழ்ச்சி
2. மொழி (அ) வார்த்தைக் குறியீடுகள்
3. எடுத்துச்சொல்லும் செயல்பாடு
   இம் மூன்றும் இலக்கிய எடுத்துரைப்பியலில் பெயர் மாற்றம் அடைகின்றன. 1.கதை 2.பனுவல் 3. எடுத்துரைப்பு

**எடுத்துரைப்பின் அம்சங்கள்**

1.இலக்கியத்தின் உள்ளடக்கத்தையும் மற்றும் அதில் வரும் பாடல்களோயே மையமாகக் கொண்டு எடுத்து கூறுவது.

2.ஆசிரியர் மற்றும் வாசகரின் செல்வாக்கு

3.ஆசிரியரின் மொழி மற்றும் வடிவம்

4. சமுகம் மற்றும் சூழல்

**கதையும் கதை மாந்தர்களும்**

எடுத்துரைப்பியல் கதை மாந்தரும் ஒரு மனிதப் பண்பின் குறியீடாக விளங்குவதை போல இருந்து விட்டது போல அதனை மறுப்பது தான் இதனை ஹெலன்சிக்ஸஸ் பெண்ணியத் திறனாய்வாளர் கதை மாந்தரின் நிலையான பண்பு என்பதை மறுக்கிறார். இலக்கியத்தின் ஓர் இயற்கைக் குணமாகத் தொடர்ந்து நிலவி வருவது தவறாகப் புரிதல் என்ற பண்பாக கதை மாந்தர்கள் அமைகிறார்கள்.

**எடுத்துரைப்பியலில் அறிஞர் கருத்துக்கள்**

***ஃபேபுலா*** : ஒரு கதையியல் நிகழ்வுகளை கால வரிசை மாறாமல் சொல்வது

***மீகேபால்***: : ஒரு கதையியல் காட்சி விவரிப்புகளைக் கூறுவது

**அல்கிர்தாஸ் ஜீலியன்கிரிமாஸ்** : கதையியலின் குறியீயல் மற்றும் கதை அமைப்புகளை தெளிவாகக் கூறுகிறார்.

**ஓநாய் ஷ்மிட்** : கதை செல்வாக்கு, கதை கட்டமைப்பு எந்த சுழலில் நடக்கிறது என்பதை தெளிவாகக் கூறுகிறார்.

***மீகையில் பக்தீன்*** : இலக்கியக் கோட்பாடுகளைக் கொண்டு கதைகூறுவது போல அமையும்.

**எடுத்துரைப்பியலில் பேச்சு பெறும் இடம்**

அடிப்படையாகவே மனிதர்கள் பேசுபவர்கள் பிறகு எடுத்துரைப்பியல் பேச்சு குறித்த இடம் சிறப்பாக பேசப்படும்.நுட்பமான முறையில் கதை சொல்லி முழுமையாகப் பயன்படுத்துவதை இல்லாமல் எடுத்துரைப்பின் பேச்சு

1. நேரடிப்பேச்சு 2. மறைமுகச் சொல்லாடல் 3.சுருக்கம்

4.போலச் செய்தல் 5. மொழியியல் கூறுகள் 6.பன்முகப்பட்ட சொல்லா

**முடிவுரை**

எடுத்துரைப்பியல் மூலம் இலக்கிய நூல்களில் செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கு பயன் உள்ளதாக அமையும். இலக்கியத்தில் சமூக சார்ந்தாக மற்றும் அரசியல் சுழல்களுடன் தொடர்புடையதாக இருப்பதை அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. **புறநானூறு 53 முதற்பதிப்பு 2010 புலியூர்க்கேசிகன் உரை சாரதா பதிப்பகம் சென்னை.**
2. **தொல்காப்பியம் அகத்திணையியல் 3 நூற்பா பதிப்பாசிரியர் வ.உ சிதம்பரம் பிள்ளை வேலாயுதம் பிரிண்டர்ஸ் தூத்துக்குடி.**
3. **குறுந்தொகை . புலியூர்கேசிகன் உரை , சாரதா பதிப்பகம் சென்னை.**
4. **திருக்குறள் ,சிற்பி உரை தாமரை பப்ளிகேஷன்ஸ் சென்னை**
5. **தொல்காப்பியம் மரபியல் 105 பேராசிரியர் க.வெள்ளைவாரணன் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.**
6. **தொல்காப்பியம் களவியல் மதிப்பாசிரியர் கு. சுந்தர மூர்த்தி லெட்சுமி பிரிண்டர்ஸ் மயிலாடுதுறை.**
7. **கலிங்கத்துப்பரணி 53 பாடல் புலியூர்கேசிகன் உரை சாரதா பதிப்பகம் சென்னை.**

**துணை நூல் பட்டியல்**


1. பேராசிரியர் க. பஞ்சாங்கம், இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும் அன்னம் பதிப்பகம் தஞ்சாவூர்.
2. பேராசிரியர் க. பஞ்சாங்கம் தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு அன்னம் பதிப்பகம் தஞ்சாவூர்.
3. தி.சு. நடராஜன் திறானாய்வுக் கலை நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் சென்னை

4.shalmith rimmon – Kennan , Narrative fiction: contemporary poetics, 1983, london


**இணை தள முகவரி**

1. https://study.com/academy/lesson/narratology-definition-overview-what-is-narrative-theory.html
2. https://www.google.com/search
3. https://www.google.com/search?q=narratology&sca_esv=41514daaec8f90aa&rl